


அவன் குடிப்பான். எப்போதாவது சிறு திருட்டுகளில் ஈடுபடுவான். இந்த இரண்டு கெட்ட பழக்கங்களும் அவனுக்கு இருந்தன. என்ன செய்வது? படிப்பில்லை. வறுமைதான் பெரும்பாலானவர்களை இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடத் தூண்டுகிறது. ஆனால், எங்களால் நம்பவே முடியாதபடி திடீரென்று ஒருநாள் குடிப்பதை அடியோடு நிறுத்திவிட்டான். என்ன மாயமந்திரம் நடந்தது என்றே புரியவில்லை. அன்றைய தினமே திருட்டு வேலைக்கும் குட்பை சொன்னான். அதுநாள் வரை மசூதி இருக்கும் பக்கம்கூட எட்டிப்பார்க்காதவன், தினசரி மசூதிக்குப் போக ஆரம்பித்தான். ஐந்து வேளையும் தவறாமல் தொழுதான். அந்த ஆண்டவன்தான் அவனுக்கு அருள் பாலித்திருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், திடீரென்று ஒருநாள் அவன் காணாமல் போய்விட்டான். அதன்பிறகு, இப்போதுதான் நீங்கள் சொல்கிறீர்கள், அவன் விமானத்தைக் கடத்தி, மோதி, இறந்துவிட்டான் என்று..”

– 9/11 கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்ட பத்தொன்பது பேரில் ஒருவனான சவூதி அரேபியாவைச் சேர்ந்த சலேம் அல் ஹஜ்மியின் தந்தை அளித்த வாக்குமூலத்தின் ஒரு பகுதி இது.

இந்த ஒரு சாம்பிள் எதற்காக என்றால், கிட்டத்தட்ட இதே மாதிரியான தொனியில்தான் பெரும்பாலான பிற சவூதி தீவிரர்களின் குடும்பத்தினரும் பேசியிருக்கிறார்கள். அதாவது, பெரும்பாலான சவூதி அல் காயிதாவினர் தம் வீட்டைப் பொறுத்தவரை உத்தமபுத்திரர்களாகவே இருந்திருக்கிறார்கள். தமக்குள் ஒரு குட்டிச்சாத்தான் உலவிக்கொண்டிருக்கும் விஷயத்தை, மிகச் சாமர்த்தியமாக மறைத்திருக்கிறார்கள். அமெரிக்கா புறப்படச் சொல்லி உத்தரவு வந்த வினாடியில், சட்டென்று உறவுகளைத் துண்டித்துக்கொண்டு காணாமல் போயிருக்கிறார்கள்.

இப்படிக் காணாமல் போனபோது, நேரடியாக அவர்கள் அமெரிக்காவுக்குப் போகவில்லை. மாறாக, இரண்டாயிரமாவது ஆண்டின் இறுதியில், ஜோர்டனைச் சேர்ந்த மிக மூத்த அல் காயிதா கமாண்டரான அபூ துராப் என்பவரிடம், இறுதிக்கட்டப் பயிற்சிகள் சிலவற்றை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அல் காயிதாவில் இணைவதற்கு முன்னமே, சில விமானக் கடத்தல் சம்பவங்களோடு தொடர்புடையவர் இந்த அபூ துராப். ஆகவே, அவர் அளித்த பயிற்சியின் முக்கிய அம்சம், விமானக் கடத்தல் சம்பந்தப்பட்டது. விமானங்களை எப்படிக் கடத்துவது? விமானிகளை எப்படிக் கையாண்டு வீழ்த்துவது? வெடிபொருட்களை விமானத்துக்குள் கையாள்வது எப்படி? – இவைதான் அபூ துராப் எடுத்த பாடங்களில் முக்கியமானவை. காக்பிட்டைக் கைப்பற்றுவது எப்படி என்பது, இன்னொரு பாடம். காக்பிட்டின் கதவு திறக்கப்படும் முதல் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் பயன்படுத்திக்கொள்வது எப்படி என்றும் அபூ துராப் சொல்லிக்கொடுத்தார்.

இம்மாதிரியான பயிற்சிகள் முடிவடைந்தபிறகு, இறுதியாக காலீத் ஷேக் முஹம்மது அவர்களைக் கராச்சிக்கு அழைத்துச் சென்றார். சுமார் இருபது நாள் என்ன காரணம் என்று தெரியாமலேயே ஒரு ரகசிய இடத்தில் அவர்கள் தங்கவேண்டியிருந்தது. பாஸ்போர்ட், விசா விவகாரங்களெல்லாம் ஏற்கெனவே சுமுகமாக முடிவடைந்துவிட்டிருந்த நிலையில், இந்தத் தாமதத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

2001–ம் ஆண்டு ஜனவரி தொடங்கி, மூன்று மூன்று பேராக, இரண்டு இரண்டு பேராக, நாலு பேர் நாலு பேராக அவர்கள் கராச்சியிலிருந்து விமானம் ஏறினார்கள். நேரே ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்குச் சென்று, அங்கிருந்து அமெரிக்கா போவதாக ஏற்பாடு. ஒவ்வொருவரிடமும் செலவுக்கு காலீத் ஷேக் பத்தாயிரம் டாலர் பணம் கொடுத்திருந்தார். அளந்து அளந்துதான் செலவு செய்யவேண்டும். செய்கிற பத்துப் பைசா செலவுக்கும் கணக்கெழுதி அனுப்பவேண்டும் என்பது உத்தரவு.

அவர்கள் அத்தனை பேரும் யு.ஏ.ஈ.க்கு வந்து இறங்கியபோது, அலி அப்துல் அஜிஸ் மற்றும் முஸ்தபா அல் ஹவ்சாவி என்று தங்களை அறிமுகப்படுத்திக்கொண்ட அந்த ஊர் அல் காயிதா போராளிகள், அவர்களை

அழைத்துப்போய் தங்கவைத்தார்கள். பணத்தை டிராவலர்ஸ் செக்குகளாக மாற்றித்தந்தது, அமெரிக்க சீதோஷணத்துக்கேற்ற உடைகள் வாங்கிக்கொடுத்தது, அமெரிக்க உணவு வகைகளை முன்னதாக அறிமுகப்படுத்திவைத்தது, சில அடிப்படை மாத்திரை மருந்துகளை வாங்கிக்கொடுத்தது போன்றவையே இந்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தோழர்கள் செய்த உதவி. 'அமெரிக்கா போகிற இந்த இளைஞர்களுக்கு இன்னின்ன உதவிகள் செய்' என்கிற உத்தரவுதான், அவர்களுக்கு இருந்தது. எதற்குப் போகிறார்கள் என்றெல்லாம் தெரியாது. விமானம் ஏறும் கணத்தில், 'அங்கே முஹம்மது அட்டா என்றொருவன் வந்து உங்களைச் சந்தித்து அழைத்துப்போவான்; அதன்பிறகு அவன் சொல்வதைக் கேட்டு நடந்துகொள்ள வேண்டியது' என்று மட்டும் சொல்லச் சொல்லி அவர்களுக்கு உத்தரவு. அதன்படியே சொல்லி அனுப்பினார்கள்.

2001 ஏப்ரல் இறுதியில், அந்தப் பதின்மூன்று பேரும் எந்தப் பிரச்னையும் இல்லாமல் இரண்டு குழுக்களாகப் பிரிந்து அமெரிக்காவின் இருவேறு இடங்களில் வந்து இறங்கினார்கள். ஃப்ளோரிடாவுக்கு வந்து இறங்கிய குழுவினரை, அட்டாவும் ஷெஹிரியும் வரவேற்றார்கள். மற்றவர்களை ஏற்கெனவே அமெரிக்காவில் வந்து தங்கியிருந்த நவாஃப் அல் ஹஜ்மியும் ஹானி ஹாஞ்சூரும் நியூயார்க்கில் வரவேற்றார்கள்.

கமாண்டர் என்கிறபடியால், அட்டாவுக்குத்தான் ஏகப்பட்ட வேலைகள் இருந்தன. அவர்கள் அத்தனை பேரையும் பாதுகாப்பான இடங்கள் தேடி தங்கவைப்பது, ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வங்கிக்கணக்குகள் ஏற்பாடு செய்து தருவது, அமெரிக்காவைப் பற்றிய அடிப்படைப் பாடங்களைப் போதிப்பது என்று நிறைய பொதுச்சேவைகள் செய்ய வேண்டியிருந்தது. யாரையும் அநாவசியமாக வெளியே போகவேண்டாம் என்று அட்டா உத்தரவிட்டிருந்தான். அவர்கள் அனைவரும் ஃப்ளோரிடா மாகாணத்திலேயே தங்கிக்கொண்டு, ஆங்காங்கே உடற்பயிற்சி நிலையங்களுக்கு மட்டும் போய் வரலாம் என்று சொல்லியிருந்தான்.

ஆனால், வாலீத் அல் ஷெஹ்ரி மற்றும் சதாம் அல் சுகாமி என்கிற இரண்டு பேர் மட்டும் கொஞ்சம் ஊர் சுற்றியிருப்பதாகப் பின்னால் விசாரணையின்போது தெரியவந்தது..

மே 19, 2001 அன்று ஷெஹ்ரியும் சுகாமியும் ஃபோர்ட் லாடர்டேலிலிருந்து பஹாமாஸ் வரை ஒரு விமானப் பயணம் மேற்கொண்டார்கள். பஹாமாஸில் உள்ள ப்ரின்ஸஸ் ரிசார்ட்ஸ் என்ற உல்லாச விடுதியில் அறையெடுத்துத் தங்கியிருக்கிறார்கள். ஆனால், மறுநாளே அவர்கள் ஃப்ளோரிடா வந்துவிட்டார்கள். ஏனென்றால், மே 21-ம் தேதியுடன் சுகாமியின் அமெரிக்க விசா முடிவடையவிருந்தது. அதன்பின் அவன் சட்டவிரோதமாகத்தான் அங்கே பதுங்கியிருந்தாக வேண்டும்.

ஜூலை 30-ம் தேதி ஷெஹ்ரி மட்டும் தனியே பாஸ்டனுக்குப் பயணம் மேற்கொண்டான். மறுநாள் அங்கிருந்து சான்பிரான்ஸிஸ்கோவுக்கு. ஓர் இரவு மட்டும் தங்கிவிட்டு, மறுநாள் லாஸ் வேகாஸ் வழியே ஃப்ளோரிடாவுக்குத் திரும்பிவிட்டான்.

இலக்கில்லாத இந்தப் பயணங்கள் எல்லாமே விமானத்தை, அதன் உள்ளே இருக்கிற அம்சங்களை, காக்பிட்டை, விமான ஊழியர்களை கவனித்துப் பதிவு செய்வதற்காகவே மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும் என்று விசாரணை கமிஷன் அறிக்கை சொல்லுகிறது. ஆனால் ஷெஹ்ரி, 9/11 திட்டத்தில் ஒரு பைலட்டாகப் பங்காற்றியவன் இல்லை. நான்கு குழுக்களில் ஏதேனும் ஒன்றின் தலைவனாகவாவது இருந்தானா என்றால் அதுவும் இல்லை. இருப்பினும், எதனால் இந்தப் பயணங்களை அவன் மேற்கொண்டான் என்பது விடையில்லாத கேள்வி.

மறுபுறம் ஹாம்பர்க்கிலிருந்து வந்திருந்த அட்டா, ஷெஹிரி, ஜரா மூவரும் 2001-ம் ஆண்டு கோடைகாலத்தில் தமது ஆயத்தங்களை ஆரம்பித்தார்கள். அவர்களது விமான ஓட்டும் பயிற்சி, அப்போது நிறைவடையும் தருவாயில் இருந்தது.

மே மாத இறுதியில் ஷெஹிரி தனியாக ஒருமுறை நியூயார்க்கிலிருந்து சான்பிரான்ஸிஸ்கோ வழியாக லாஸ் வேகாஸுக்கு ஒரு பயணம் மேற்கொண்டான். ஜரா, பால்டிமோரிலிருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் வழியாக லாஸ் வேகாஸுக்குச் சென்று வந்தான். அட்டா, பாஸ்டனிலிருந்து சான்பிரான்ஸிஸ்கோ வழியே லாஸ் வேகாஸுக்குச் சென்றான்.

மூன்றுபேருமே யுனைடெட் ஏர்லைன்ஸ் விமானத்தில், முதல் வகுப்பில்தான் பயணம் செய்தார்கள். செப்டெம்பர் 11 அன்று அவர்கள் கடத்த உத்தேசித்திருந்த அதே ரக விமானங்கள் அவை. அவற்றின் அமைப்பையும் சாத்தியங்களையும் ஆராய்வதே இப்பயணங்களின் நோக்கம்.

அதே காலகட்டத்தில், ஜராவும் ஹாஞ்சூரும் பயிற்சியில் போராடிக்கொண்டிருந்தார்கள். ஜரா, ஹார்ட்மன் ஏவியேஷன் என்ற விமானப்பள்ளியில் பயிற்சிக்காக அப்போது சேர்ந்திருந்தான். பயிற்சியின்போது, நியூயார்க்கின் முக்கியமான கட்டடங்களான உலக வர்த்தக மையம் இருக்கும் ஹட்சன் காரிடார் வழியாக

விமானம் ஓட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அந்த வழியாகவே பலமுறை பறந்திருக்கிறான்.

ஆனால், அவனது விமான ஆசிரியர்களுக்கு அவன் ஓட்டுவது ரொம்பப் பயமளித்தது. கண்டிப்பாக மோதுவதற்காகவே ஓட்டுபவன் மாதிரியே பயிற்சியின்போது ஓட்டியிருக்கிறான். 'ம்ஹூம், நீ தேறமாட்டாய்' என்பதுதான் அவன் பெற்ற சர்டிஃபிகேட்.

நியூஜெர்சியில் Air Fleet Training Systems என்ற பயிற்சிப்பள்ளியில் சேர்ந்திருந்த ஹாஞ்சூருக்கும் இதே நிலைமைதான். அவனும் ஹட்சன் காரிடார் வழியாகவே பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பயிற்சியாளரை வற்புறுத்தியிருக்கிறான். ஆனால், அவனுக்கு விமானம் ஓட்டும் கலையின் அடிப்படை பிடிபடவேயில்லை. ஒருவேளை தனது வாத்தியார்தான் சரியில்லையோ என்று நினைத்து, ஸ்கூலை மாற்றிப்பார்க்கலாம் என்று கால்டுவெல் விமானப் பயிற்சி அகடமி என்கிற இன்னொரு இடத்தில் சேர்ந்து பயில ஆரம்பித்தான். அந்தப் பள்ளியில் ஒரு சௌகரியம், வாடகைக்கு சிறு விமானங்களைத் தருவார்கள்.

அப்படி சிறு விமானங்களை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, ஹாஞ்சூர் பலமுறை சுற்றிவந்திருக்கிறான். ஒருமுறை அப்படிப்பட்டதொரு பயணத்தில், தன்னுடன் நவாஃப் அலி ஹஜ்மியையும் அழைத்துக்கொண்டு, வாஷிங்டன் டிசி அருகாமையில் சுற்றியிருக்கிறான் என்பதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன. ஜூன் மாத வாக்கில் அவன் அரிசோனாவுக்கு வந்து விமான சிமுலேட்டர் மென்பொருள்களிலும் பயிற்சி மேற்கொண்டிருக்கிறான்.

இந்த இரண்டு பிரகஸ்பதிகளும் கற்றுக்கொள்கிறேன் பேர்வழி என்று, அமெரிக்க விமானப் பயிற்சிப் பள்ளி விமானங்களை ஒரு வழி பண்ணிக்கொண்டிருந்தபோது, அட்டாவும் ஷெஹிரியும் தம் பயிற்சி நடவடிக்கைகளை முழுவதுமாக நிறைவு செய்துவிட்டு, அடுத்தகட்டப் பணிகளுக்கு ஆயத்தமாகத் தொடங்கிவிட்டார்கள்.

ஆகஸ்டு மாதம் முழுவதும் கடத்தல்காரர்கள் தம் உடலை வலுப்படுத்தும் பயிற்சிகளில்தான் மிகத் தீவிரமாக ஈடுபட்டார்கள். நான்கு விமானிகள் மட்டும் சிறு விமானங்களை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, அடிக்கடி ஓட்டிப் பழகிக்கொண்டிருந்தார்கள்.

ஆகஸ்டு பத்து, பதினைந்து தேதிவாக்கில், தமது பயிற்சிகள் முடிவடைந்துவிட்டதாக, அவர்கள் தமக்குள் முடிவு செய்துகொண்டார்கள். உடனடியாகத் தங்களுக்குத் தேவையான உபகரணங்களை ஒவ்வொன்றாகப் பட்டியலிட்டு, வாங்கிச் சேர்க்கத் தொடங்கினார்கள். முதலில் தங்களுக்குத் தேவையான சிறு கத்திகளை வாங்கிக்கொண்டார்கள்.

ஜரா, ஒரு பைலட் ஷாப்பிலிருந்து (விமானிகளுக்கான உபகரணங்கள் விற்கவென்றே பிரத்தியேகமான கடைகள் அமெரிக்காவில் உண்டு. அதைத்தான் Pilot Shops என்பார்கள்.) நான்கு GPS Units வாங்க முயற்சி செய்தான். Global Positioning System என்று அழைக்கப்படும் ஜி.பி.எஸ். கருவி, பறக்கும்போது தாங்கள் இருக்கும் இடம் எது என்பது பற்றிய விவரங்களை விமானிகளுக்கு, மிகத் துல்லியமாகச் சொல்லும். அட்சரேகை, தீர்க்கரேகை சுத்தமாக, எந்த இடத்தில், எந்தக் கோணத்தில், அந்தக்கணம் விமானம் பறந்து கொண்டிருக்கிறது என்பதை இக்கருவி, சாட்டிலைட் தொடர்பின் மூலம் சுட்டிக்காட்டும். (அனுபவமுள்ள விமானிகளுக்கு ஜி.பி.எஸ். கருவி அவ்வளவாக வேண்டியிருக்காது. ஆனால், புதிய விமானிகளுக்கு இக்கருவி அவசியம் உபயோகப்படும்.) ஆனால், ஒரு கருவியைத்தான் அவனால் வாங்க முடிந்தது. கூடவே விமானம் ஓட்டப் பயன்படும் சில வரைபடங்களையும் வாங்கிக்கொண்டான்.

ஆகஸ்டு 16-ம் தேதி அட்டாவுக்கு எங்கிருந்தோ ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. சங்கேத மொழியில், டிக்கெட் வாங்கச் சொல்லி உத்தரவு.

'என்ன தேதிக்கு, எங்கிருந்து எங்கு போக' என்று கேட்டான் அட்டா.
"செப்டெம்பர் 11-ம் தேதி காலை, அமெரிக்காவின் நான்கு விமான நிலையங்களிலிருந்து புறப்படும் பயணிகள் விமானங்கள்" என்றது எதிர்முனை. விமானங்களின் பெயர்கள், அவை புறப்பட்டுப் போகும் இடம் எல்லாம் சொல்லப்பட்டது. 'டிக்கெட்டை வாங்கிவிட்டு மறு தகவல் தரவும்' என்று அறிவுறுத்தப்பட்டது.

அட்டா உஷாரானான். கிளைமேக்ஸ் நெருங்குவது அவனுக்குப் புரிந்துவிட்டது. ஆகஸ்ட் 23-ம் தேதி நெவார்க் (நியூஜெர்சி மாகாணத்தில் விமான நிலையம் இருக்குமிடம்.) சென்றான். அங்கே ஹஜ்மி ஏற்கெனவே வந்து காத்திருந்தான். இருவருமாகச் சென்றே தங்களுக்கு வேண்டிய 19 டிக்கெட்டுகளை முன்பதிவு செய்தார்கள். 19 டிக்கெட்டுகளை அவர்கள் ஒரே நாளில் முன்பதிவு செய்யவில்லை. மாறாக, ஆகஸ்ட் 24-ம் தேதி தொடங்கி, செப்டெம்பர் 5-ம் தேதிவரை தினசரி கொஞ்சமாகத்தான் பதிவு செய்தார்கள்.

"எல்லாம் நல்லபடியாக முடியவேண்டும்" என்றான் ஹஜ்மி. அட்டா புன்னகை செய்தான்